# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 57/2022**

பெயர்:**பாலு** நாள்: 28.01.2026

வா.சா.1 – 2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – பாலு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 03:00</u>

என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.1** ன் சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண். என்ன என்றால், சர்வே எண். 4/2I2 என்று உள்ளது. சர்வே எண் 4/2I2 என்று பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். வேறு ஒரு சர்வே எண். இருந்த இடத்தில் பிளேடால் சுரண்டி எடுத்துவிட்டு சர்வே எண் 4/2I2 என்று எழுதப்பட்டுள்ளது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. இந்த ஆவணத்தை டைப் செய்தவர் யார் என்றால், பத்திர எழுத்தாளர் திரு.ஜெயபால் ஆவார். **வா.த.சா.ஆ.1** ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தில் "ஆவண எண். 653/1990 ன்படி மற்றும் ஆவண எண்.1156/1993 ன்படி " இதை மட்டும் பேனாவால் ஏன் எழுதியுள்ளார்கள் என்றால், மூலப்பத்திரத்தின் ஆவண எண்ணை டைப் செய்யாததால் அதை மட்டும் பேனாவால் பத்திர எழுத்தர் எழுதி உள்ளார். பத்திரம் தயார் செய்தபோது மேற்கூறிய விவரத்தை எழுதவில்லை என்றும் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு எழுதி உள்ளார்கள் என்றால், சரியல்ல. 2-ம் பிரதிவாதியை பொறுப்புக்கு உள்ளாக்க வேண்டும் என்பதற்காக மேற்கூறிய சர்வே எண்ணை பேனாவால் திருத்தி எழுதியிருக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த ஆவணத்தை வாங்குபவர் மற்றும் விற்பவர் என்ற வாசகத்தை பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால், அதை ஆவணம் தயார் செய்தவர் எழுதியுள்ளார். ஆவணத்தில் கீறல் என்ற இடத்தில் யார் கைரேகை வைத்தார்கள் என்ற

விவரத்தை குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. பத்திரத்தை 08.02.2019 ம் தேதி அன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த பத்திரத்தின் முழு வாய்தா 3 மாதங்கள் என்றால், நிலத்தை அளவீடு செய்துகொடுத்தால் 3 மாதங்களுக்குள் கிரயம் செய்துகொடுப்பதாக ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த பத்திரத்தின்படி 07.05.2019 உடன் 3 மாத வாய்தா முடிவடைவது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. பத்திரம் எழுதப்பட்ட தேதியில் இருந்து சுமார் 35 மாதங்கள் கழித்து வழக்கறிஞர் மூலம் அறிவிப்பினை அனுப்பினேன் என்றால், நில அளவீடு செய்து கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால் 1-ம் பிரதிவாதியும், 2-ம் பிரதிவாதியும் கூட்டு சதி செய்து 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்தது பின்னர் தெரிய வந்ததால் கிரய ஒப்பந்தப் பணத்தை திருப்பி கேட்டும், 1-ம் பிரதிவாதி திருப்பிதர மறுத்ததால், வழக்கறிஞர் மூலம் அறிவிப்பினை அனுப்பினேன். 2-பிரதிவாதி நிலத்தினை வாங்கி 9 மாதம் கழித்துதான் நான் அறிவிப்பினை அனுப்பினேன் என்றால், 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்த விவரம் பின்னிட்டுதான் எனக்கு தெரியவந்ததால் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பினை அனுப்பினேன். கிரயம் செய்துகொண்ட தேதியில் இருந்து 3 மாத வாய்தாக்குள் கிரயம் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் கொடுத்த கிரய முன்தொகை இழக்ககூடும் என்று **வா.த.சா.ஆ.1** ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான் 1-ம் பிரதிவாதியிடம் சொல்லப்பட்ட 3 மாத வாய்தா காலங்களில் பலமுறை அவரிடம் நேரில் சென்று கேட்டபோது சரியாக பதில் கூறாமல் கால தாமதம் செய்து வந்தார். கொரோனா காலம் என்பதால் நில அளவீடு செய்யஇயலவில்லை என்று 1-ம் பிரதிவாதி தெரிவித்தார். 2-பிரதிவாதியை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் நானும் 1-ம் பிரதிவாதியும் ஒன்றாக சேர்ந்துகொண்டு மோசடியாக **வா.த.சா.ஆ.1** ஆவணத்தை

தயாரித்துள்ளோம் என்றால், சரியல்ல. சொத்து விவரத்தில் பேனாவால் திருத்தப்பட்டுள்ளது என்பதால், **வா.த.சா.ஆ.**1 செல்லத்தக்கது அல்ல என்றால், சரியல்ல.கிரய உடன்படிக்கையில் உள்ள சொத்துக்களும் **வா.த.சா.ஆ.**8 ஆவணத்தில் உள்ள சொத்துக்களும் வெவ்வேறாக உள்ளது என்றால், சரியல்ல. ஆகவே 2-ம் பிரதிவாதியின் சொத்தைப்பொறுத்து பற்றுகை கோர இயலாது என்றால், சரியல்ல. இந்த வழக்கானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால், சரியல்ல. இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.58/2022 என்ற வழக்கில் இதேப்போல் மோசடியான ஆவணம் தயார் செய்து அந்த வழக்கிலும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. என்னுடைய அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி இதுபோல் பல மோசடியான ஆவணங்களைத் தயார் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 03:25</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.01.28 15:32:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.